# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# பத்தாம் பத்து

## ஒன்பதாம் திருவாய்மொழி - சூழ் விசும்பு
## பரஜ்ஞானத்தைப் பெற்ற ஆழ்வார் எம்பெருமானால் அர்ச்சிராதிகதியைக் காட்டப் பெற்று, திருநாட்டுக்குச் சென்று அடியாரோடு சேர்ந்தமையை மயர்வற்ற மதிநலத்தால் கண்டு அருளிச் செய்தல்

** சூழ் விசும்பு அணி முகில் * தூரியம் முழக்கின *
ஆழ் கடல் அலை திரை * கை எடுத்து ஆடின **
ஏழ் பொழிலும் * வளம் ஏந்திய என் அப்பன் *
வாழ் புகழ் நாரணன் * தமரைக் கண்டு உகந்தே 1

நாரணன் தமரைக் கண்டு உகந்து * நன்னீர் முகில் *
பூரண பொற்குடம் * பூரித்தது உயர் விண்ணில் **
நீர் அணி கடல்கள் * நின்று ஆர்த்தன * நெடு வரைத்
தோரணம் நிரைத்து * எங்கும் தொழுதனர் உலகே 2

தொழுதனர் உலகர்கள் * தூப நல் மலர் மழை
பொழிவனர் * பூமி அன்று அளந்தவன் * தமர் முன்னே **
எழுமின் என்று இரு மருங்கு இசைத்தனர் * முனிவர்கள் *
வழி இது வைகுந்தற்கு என்று * வந்து எதிரே 3

எதிர் எதிர் இமையவர் * இருப்பிடம் வகுத்தனர் *
கதிரவர் அவர் அவர் * கை நிரை காட்டினர் **
அதிர் குரல் முரசங்கள் * அலை கடல் முழக்கொத்த *
மது விரி துழாய் முடி * மாதவன் தமர்க்கே 4

மாதவன் தமர் என்று * வாசலில் வானவர் *
போதுமின் எமதிடம் * புகுதுக என்றலும் **
கீதங்கள் பாடினர் * கின்னரர் கெருடர்கள் *
வேத நல் வாயவர் * வேள்வி உள் மடுத்தே 5

வேள்வி உள் மடுத்தலும் * விரை கமழ் நறும் புகை *
காளங்கள் வலம்புரி * கலந்து எங்கும் இசைத்தனர் **
ஆண்மின்கள் வானகம் * ஆழியான் தமர் என்று *
வாள் ஒண் கண் மடந்தையர் * வாழ்த்தினர் மகிழ்ந்தே 6

மடந்தையர் வாழ்த்தலும் * மருதரும் வசுக்களும் *
தொடர்ந்து எங்கும் * தோத்திரம் சொல்லினர் * தொடு கடல்
கிடந்த எம் கேசவன் * கிளர் ஒளி மணி முடி *
குடந்தை எம் கோவலன் * குடி அடியார்க்கே 7

குடி அடியார் இவர் * கோவிந்தன் தனக்கு என்று *
முடி உடை வானவர் * முறை முறை எதிர் கொள்ள **
கொடி அணி நெடு மதிள் * கோபுரம் குறுகினர் *
வடிவுடை மாதவன் * வைகுந்தம் புகவே 8

வைகுந்தம் புகுதலும் * வாசலில் வானவர் *
வைகுந்தன் தமர் எமர் * எமதிடம் புகுது என்று **
வைகுந்தத்து அமரரும் * முனிவரும் வியந்தனர் *
வைகுந்தம் புகுவது * மண்ணவர் விதியே 9

விதி வகை புகுந்தனர் என்று * நல் வேதியர் *
பதியினில் பாங்கினில் * பாதங்கள் கழுவினர் **
நிதியு நற்சுண்ணமும் * நிறை குட விளக்கமும் *
மதி முக மடந்தையர் * ஏந்தினர் வந்தே 10

** வந்து அவர் எதிர் கொள்ள * மா மணி மண்டபத்து *
அந்தமில் பேர் இன்பத்து * அடியரோடு இருந்தமை **
கொந்தலர் பொழில் * குருகூர்ச் சடகோபன் * சொல்
சந்தங்கள் ஆயிரத்து * இவை வல்லார் முனிவரே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---